FORB Learning Platform

# எழுத்துப்பிரதி: மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் உள்ளடக்கங்கள்- மனசாட்சிக்கமைவான ஆட்சேபனை

சிந்தனை மற்றும் மனசாட்சிக்கான சுதந்திரமானது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் 18 ஆவது உறுப்புரையினால் மதம் மற்றும் நம்பிக்கையுடன் சேர்த்து பாதுகாக்கப்படுகிறது, ஆகவே, மனசாட்சிக்கு அமைய ஆட்சேபிப்பதற்கான உரிமை, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் ஒரு பகுதியாகும்.

நீங்கள் செய்ய வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்ற ஒன்றை நீங்கள் செய்கின்றமை உங்களது மனசாட்சி அல்லது மத நம்பிக்கையினை மீறுமென்ற காரணத்தினால் நீங்கள் அதனை செய்ய மறுக்கின்றபோது அது மனசாட்சிக்கமைவான ஆட்சேபனை எனப்படும்.

நபர்கள் செய்ய மறுக்கின்ற விடயங்களுக்கான உதாரணங்களாக, கட்டாய இராணுவ சேவை, சத்தியப்பிரமாணம் செய்தல், இரத்தமாற்றம் பெறுதல் அல்லது சில மருத்துவ முறைகளில் பங்கேற்பது ஆகியவற்றை குறிப்பிடலாம். ஐ.நா ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள, மனசாட்சிக்கமைவான ஆட்சேபனையின் ஒரேயொரு குறிப்பிட்ட வடிவமாக கட்டாய சேவையை மறுப்பதற்கான உரிமை அமைகின்றது. இது சட்டபூர்வமாக பிணிக்கும் தன்மையினைக் கொண்டுள்ள ஐ.நா உடன்படிக்கைகளிலோ அல்லது அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்திலோ குறிப்பிடப்படவில்லை. மாறாக, இது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழுவின் பொது கருத்துரை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் 18 வது உறுப்புரையினை அரசாங்கங்கள் எவ்வாறு பொருட்கோடல் செய்ய வேண்டும் என்பதை விளக்குகின்ற, ஐ.நா மனித உரிமை நிபுணர்களால் எழுதப்பட்ட ஒரு ஆவணமாகும். கொல்ல வேண்டுமென்ற தேவைப்பாடு உங்களுடைய மனசாட்சிக்கான சுதந்திரம் மற்றும் உங்களது மதம் அல்லது நம்பிக்கையினை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்துடன் தீவிரமாக முரண்படுமாயின், உறுப்புரை 18 இராணுவ சேவையினை மனசாட்சி அடிப்படையில் ஆட்சேபிப்பதற்கான உரிமைக்கு ஆதரவளிக்கின்றது என இக்குழு தீர்மானித்துள்ளது.

பல நாடுகள் இந்த உரிமையை அங்கீகரித்துள்ளதுடன் மாற்று தேசிய சேவை அமைப்புகளையும் விலக்குகளையும் வழங்குகின்றன. ஆனால் மத அல்லது சமாதானவாத நம்பிக்கைகள் காரணமாக இராணுவ சேவையை செய்ய மறுப்பவர்களை சிறையில் அடைக்கும் பல அரசுகள் இன்னும் உள்ளன. இதனால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள குழுவினர் யெகோவாவின் சாட்சிகள் ஆவர். எடுத்துக்காட்டாக, தென் கொரியாவில், டிசெம்பர் 2016 இல் 389 யெகோவாவின் சாட்சிகள் மனசாட்சிக்கமைவாக ஆட்சேபனை தெரிவித்ததற்காக சிறைத்தண்டனை அனுபவித்து வந்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் அமைப்புகளின்படி, மனசாட்சிக்கமைவாக ஆட்சேபிப்பவர்கள் அனைவரும் பாகுபாடின்றி அணுகக்கூடிய வகையில் இராணுவமற்ற மாற்று சேவை ஏற்பாடுகள் காணப்பட வேண்டும் என்பதுடன் இராணுவ சேவையால் பாதிக்கப்பட்ட

அனைவரும் மனசாட்சிக்கமைவாக ஆட்சேபிப்பதற்கான உரிமை மற்றும் அதை எவ்வாறு கோருவது என்பது பற்றியத் தகவல்களுக்காக அணுகுதலைக் கொண்டிருத்தல் வேண்டும். கட்டாயப்படுத்தப்படுபவர்களும் தன்னார்வலர்களும் இராணுவ சேவைக்கு முன்னும், இராணுவ சேவையின் போதும் அதனை ஆட்சேபிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

இராணுவ சேவைக்கான மனசாட்சிக்கமைவான ஆட்சேபனைக்கு மேலதிகமாக, மனசாட்சிக்கமைவான ஆட்சேபிப்பின் பிற வடிவங்களும் பெரும்பாலும் தேசிய அளவில் அங்கீகரிக்கப்படுகின்றன. இது பிரதானமாக சுகாதாரப் பராமரிப்புடன் தொடர்புறுகின்றது. உதாரணமாக கருக்கலைப்பு செய்ய மறுக்கும் குடும்பநல தாதியர் மற்றும் மருத்துவர்கள் ஆகியோரை குறிப்பிடலாம். சில நாடுகளில், ஒரே பாலின திருமணங்கள் தொடர்பாக மனசாட்சிக்கமைவான ஆட்சேபனை பற்றிய பிரச்சினைகள் எழுப்பப்பட்டுள்ளன. பெரும்பாலும், முரண்படுகின்ற உரிமைகள் பற்றிய சிக்கலான கேள்விகள் எழுகின்றன, உதாரணமாக மனசாட்சிக்கமைவாக ஆட்சேபிப்பதற்கான உரிமையானது பெண்களின் உரிமையுடன் அல்லது பாரபட்சத்திற்கெதிரான சட்டங்களுடன் முரண்படுகின்றபோது சிக்கலான நிலை உருவாகின்றது.

இவ்வகையான மனசாட்சிக்கமைவான ஆட்சேபனைக்கு இன்னும் தெளிவான சர்வதேச சட்ட நியமமொன்று இல்லை. உண்மையில் இந்த பிரச்சினை மிகவும் சர்ச்சைக்குரியது.

நீங்கள் சந்திக்கக்கூடிய மூன்று வாதங்கள் இங்கே தரப்பட்டுள்ளன:

மனசாட்சிக்கமைவான ஆட்சேபனை என்பது உங்கள் மதம் அல்லது நம்பிக்கைகளைக் கொண்டிருப்பதற்கான முழுமையான உரிமையின் ஒரு பகுதியாகும் என்றும் அதனை ஒருபோதும் மட்டுப்படுத்த முடியாது என்றும் சிலர் வாதிடுகின்றனர். உங்களுடைய மனசாட்சியினைப் பின்பற்றுதலினால் நீங்கள் எந்தவொரு தண்டனைக்கோ அல்லது துன்பத்திற்கோ உட்படுத்தப்படக்கூடாது என இவர்கள் வாதிடுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு பக்தியுள்ள சமாதானவாதியாக மற்றும் ஒரு சிப்பாயாக இருப்பது என்பது சாத்தியமற்றது. எனவே சமாதானவாதிகளை படையினராக இருக்கும்படி கட்டாயப்படுத்துவது மதம் அல்லது நம்பிக்கையொன்றினைக் <u>கொண்டிருப்பதற்கான</u> அவர்களின் உள்ளார்ந்த முழுமையான உரிமையை மீறுகிறது.

இன்னும் சிலர் இது ஒரு முழுமையான உரிமை என்று ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் சூழ்நிலைகள் இதில் தாக்கம் செலுத்துகின்றன என்று நினைக்கிறார்கள். தங்களது நிலைமை குறித்து வேறு வழியில்லாமல் கட்டாயப்படுத்தப்படுபவர்கள், கைதிகள் மற்றும் கட்டாய இராணுவச் சேவைக்கு அமர்த்தப்பட்டோர் ஒருபோதும் தங்கள் மனசாட்சியை மீறுமாறு நிர்ப்பந்திக்கப்படக்கூடாது என்று அவர்கள் வாதிடுகின்றனர். ஆனால் ஒரு வேலைக்கு தானாக முன்வந்து விண்ணப்பிக்கும் நபர்கள் மற்றும் அதை விட்டு வெளியேற சுதந்திரம் உள்ளவர்கள் தங்கள் தொழிற்தருனர் தங்கள் மனசாட்சிக்கு இடமளிப்பார் என்று தானாக எதிர்பார்க்க முடியாது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உங்கள் மனசாட்சிக்கு ஏற்ப செயற்படத் தெரிவு செய்கின்றமையானது, அதற்கான ஒரு விலையினைக் கொண்டிருக்கும்.

ஏனையோர் மனசாட்சிக்கமைவான ஆட்சேபனை என்பது ஒரு செயல் என்றும், ஆகவே, அது உங்கள் மனசாட்சி, மதம் அல்லது நம்பிக்கைகளின் வெளிப்படுத்துகையொன்றுமாகும் என வாதிடுகின்றனர். மதத்தை வெளிப்படுத்துவதற்கான உரிமை மட்டுப்படுத்தப்படலாம், ஆனால், அது ஏனையோரின்

உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள், பொது சுகாதாரம், ஒழுங்கு அல்லது ஒழுக்கங்களைப் பாதுகாப்பதற்கு அவசியமானபோது மட்டுமே மட்டுப்படுத்தப்படலாம். இராணுவ சேவைக்கான மனசாட்சிக்கமைவான ஆட்சேபனை தொடர்பாக பார்க்கின்றபோது, தேசிய பாதுகாப்பு என்பது மத சுதந்திரம் அல்லது நம்பிக்கையை மட்டுப்படுத்துவதற்கான நெறிமுறையான அடிப்படையொன்றல்ல என்பதை கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும்.

இந்த நிலைகளில் எது சரியானது என்பது தொடர்பில் சட்ட நிபுணர்கள் உடன்பட்டுக் கொள்ளவில்லை.

சுருக்கமாக கூறின், இந்த படத்தில் நாம் மனசாட்சிக்கமைவான ஆட்சேபனை பற்றி பார்த்தோம். நீங்கள் சாதாரணமாக செய்யவேண்டுமென எதிர்பார்க்கப்படும் ஒன்றைச் செய்ய மறுக்கும் உரிமை மனசாட்சிக்கமைவான ஆட்சேபனை ஆகும். கட்டாய இராணுவ சேவைக்கான மனசாட்சிக்கமைவான ஆட்சேபனைக்கான உரிமை சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் பாதுகாக்கப்படுகிறது. பல நாடுகள் இந்த உரிமையை அங்கீகரிக்கின்றன. ஆனால் சில நாடுகள் மனசாட்சிக்கமைவாக எதிர்ப்பவர்களை சிறையில் அடைக்கின்றன. பல அரசுகள் தேசிய மட்டத்தில் மனசாட்சிக்கமைவான ஆட்சேபனைக்கான உரிமையை பிற வடிவங்களிலும் அங்கீகரிக்கின்றன. இருப்பினும், இந்த உரிமைகள் சர்ச்சைக்குரியன என்பதுடன் இது தொடர்பான சர்வதேச சட்டம் இன்றும் முழுமையாக உருவாக்கப்படவில்லை.

மனசாட்சிக்கமைவான ஆட்சேபனைக்கான உரிமையினைக் குறிக்கும் மனித உரிமை ஆவணங்களின் உரைகள் உள்ளடங்கலாக அது பற்றிய கூடுதல் தகவல்களை இணையதளத்தில் உள்ள பயிற்சி ஆவணங்களில் காணலாம்.

Copyright: SMC 2018